**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.70/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தணிகாசலம் | மதம் | : இந்து |
| த/பெ | : பக்தவச்சலம் | ஜாதி | : -- |
| வயது | : 43 | கிராமம் | : ராமகிருஷ்ணாபுரம் |
| தொழில் | : MRF பணியாளர் | வட்டம் | : திருத்தணி |

**06.02.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 1292ம் பசலிக்கான சாகுபடி அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(சாகுபடி அடங்கல் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. என் தந்தை பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (10 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ 2 வரிசை (10 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (2 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ 3 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மின் இணைப்பு எண்.92க்கு என் அப்பா பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண அட்டை வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அப்பா பெயரில் உள்ள மின் கட்டண ரசீது தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீது வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. என் அப்பா பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள் (3 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(மின் கட்டண ரசீதுகள் வா.சா.ஆ 6 வரிசை ( 3 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல்

செய்கிறேன். **(புல வரைபடம் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது) நான்** வருவாய் கோட்டாட்சியருக்கு 20.09.2021ம் தேதியிட்டு கொடுத்த மனு நகல் தாக்கல் செய்கிறேன். **(மனு வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 28.10.2021ம் தேதியிட்ட வருவாய் கோட்ட அலுவலரின் கடிதம் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. 14.09.2022ம் தேதியிட்டு நான் திருத்தணி வட்டாட்சியருக்கு கொடுத்த மனு நகல் தாக்கல் செய்கிறேன். **(மனு வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது ஆதார் அட்டை அசல் நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்த நகல் தாக்கல் செய்கிறேன். **(ஆதார் அட்டை வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** எனது தகப்பனார் பெயரில் உள்ள குடும்ப அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(குடும்ப அட்டை வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு 15.09.2023ம் தேதியிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 3 ஆகவும் நில அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 4 ஆகவும் புகைப்படங்கள் நீ.ம.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

6. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு 09.08.2024ம் தேதியிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 6 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 7 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 8 ஆகவும் நில அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ 9 ஆகவும் புகைப்படங்கள் நீ.ம.சா.ஆ 10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)